# காவல் துறை அலட்சியத்தால் குவாரிக்கு எதிராக புகாரளித்த சமூக ஆர்வலர் கொலை

## கள ஆய்வுக்குழு குற்றச்சாட்டு

**மதுரை, அக். 3:** கரூர் மாவட்டத்தில் கல்குவாரிக்கு எதிராக புகார் அளித்த மனித உரிமை காப்பாளர் ஜெகநாதன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் காவல்துறை, கனிமவளத்துறையினரின் அலட்சியமாக செயல்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம் க. பரமத்தி அருகே கல்குவாரிக்கு எதிராக புகார் அளித்த மனித உரிமைக் காப்பாளர் ஜெகநாதன் கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக மனித உரிமைக்காப்பாளர் கூட்டமைப்பின் சார்பில் மணப்பாறை சட்டப்பேரவை உறுப்பினர் அப்துல் சமது தலைமையில் 8 பேர் கொண்ட ஆய்வுக்குழுவினர் மேற்கொண்ட கள ஆய்வு அறிக்கை மதுரை மக்கள் கண்காணிப்பக அலுவலகத்தில் திங்கள்கிழமை வெளியிடப்பட்டது.

இதில் சுய ஆட்சி இந்தியா கட்சி தேசியத் தலைவர் கிறிஸ்டினா சாமி அறிக்கையை வெளியிட்டு கூறியது: கடந்த செப்-10ஆம் தேதி ஜெகநாதன் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக உண்மை கண்டறியும் ஆய்வை மேற்கொண்டோம். சட்டவிரோத கல்குவாரிகளை எதிர்த்து 2019ஆம் ஆண்டு முதல் ஜெகநாதன் மனு அளித்துள்ளார். இவரை கல்குவாரி தரப்பினர் தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

குவாரி நிர்வாகி 2019ஆம் ஆண்டில் ஜெகநாதனை இரு முறை கொலை செய்ய முயற்சித்துள்ளார். தாக்குதலுக்கு பிறகும் கூட சட்டவிரோத குவாரிக்கு எதிராக அவர் போராடி வந்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் 180 குவாரிகளில் 76 குவாரிகள் தான் செயல்படுகின்றன என அரசு தகவல் அளித்துள்ளது. ஆனால் ஆய்வின்போது அனைத்து கல்குவாரிகளுமே சட்டவிரோதமாகத்தான் செயல்படுகிறது. சட்ட விரோதமாக 500, 600அடிக்கு கீழ் ஆழமாகத் தோண்டியுள்ளனர். செப்-8ஆம் தேதி ஜெகநாதனின் புகாரை தொடர்ந்து குவாரிக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. இதனால் குவாரி தரப்பினர் செப்டம்பர் 10ஆம் தேதி ஜெகநாதனை பின் தொடர்ந்து சென்று வாகனத்தை மோதவைத்து கொலை செய்துள்ளனர்.

மேலும் ஜெகநாதனின் உடலில் வெட்டுக்காயங்களும் இருந்துள்ளன. காவல்துறையினர் மற்றும் கனிமவளத்துறையினர் ஜெகநாதன் அளித்த புகார் மனுக்களை நிராகரித்ததன் விளைவுதான் இந்த கொலை. 2019ஆம் ஆண்டு ஜெகநாதனை கொலை செய்ய நடந்த முயற்சி வழக்கை வாய்ச் சண்டை என வழக்குப் பதியப்பட்டுள்ளது. காவல்துறையினர் ஜெகநாதனுக்கு எதிராக இருந்துள்ளனர். கனிமவளத்துறையினர் தங்களது பணிகளை முறையாக மேற்கொள்ளவில்லை. கொலை செய்யப்பட்ட ஜெகநாதனின் குடும்பத்திற்கு முறையான நீதி கிடைக்க வேண்டும் என்றார்.